OS.No. 44/2024
Date: 22.01.206
DW-1 இளையபெருமாள், த/பெ. கோபால் பிள்ளை

**வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னுடைய சொந்த ஊர் ஆனானந்தல் கிராமம் என்றால் சரிதான். நான் ஆனானந்தல் கிராமத்தில் வசிக்கிறேனா திருவண்ணாமலையில் வசிக்கிறேனா என்றால் ஆனானந்தல் கிராமத்தில் வசிக்கிறேன். வாதி சின்னபொன்னுவை தெரியுமா என்றால் தெரியும். எத்தனை வருடமாக வாதியை தெரியும் என்றால் 30 வருடமாக தெரியும். வாதி எனக்கு எதரிாக என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளால் என்ன விபரம் தெரியுமா என்றால் வட்டிக்கு ஈடாக சொத்தை எழுதி வாங்கிவிட்டதாக சொல்கிறார்கள் ஆனால் அவ்வாறு இல்லை நான் சரியான முறையில் தான் கிரயம் பெற்றேன். வாதி சின்னபொன்னும் ஆனானந்தல் கிராமம் என்றால் சரிதான் ஆனால் வெவ்வேறு சமுகம். வாதியின் கணவர் பெயர் அர்ஜீணன் என்றும் அவர் உடல் நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது அவர் சென்னையில் வசித்து வருவதாக தான் என்னிடம் சொன்னார்கள். பொதுவாக கடன் கேட்டு வரும்போது கடன் கொடுப்பவர் சொத்தை பொறுப்புக்கா எழுதி வாங்கிகொள்ளும் வழக்கம் கிராம பகுதியில் உள்ளது என்றால் அவ்வாறு எந்தவொரு வழக்கமும் இல்லை. வாதி சின்னபொன்னின் கணவர் உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது அவரது வைத்திய செலவுக்காக ஊரில் உள்ள பலரிடம் சிறு சிறு கடன் வாங்கி இருந்தால் அவர்களுக்கு மொத்தமாக பைசல் செய்வதற்காக என்னிடம் ரூ.15 ஆயிரம் கடந்த 2016ம்

ஆண்டு கடனாக கேட்டார் என்றால் சரியல்ல. நான் ஊரிலும், திருவண்ணாமலை நகரிலும் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். வாதி என்னிடம் ரூ.15 ஆயிரம் கடன் கேட்கும்போது வாதிக்கு சொந்தமான சொத்தை கிரயம் எழுதி கொடுத்தால் நான் மொத்தமாக தொகையை கடனாக தருகிறேன் என்று கூறினேன் என்றால் சரியல்ல. மேற்படி வாதி சின்னபொன்னுக்கு படிப்பறிவு இல்லாததால் தாவா சொத்தை அடமானம் செய்து தருவதாகதான் என்னிடம் சொல்லி மேற்படி தொகை ரூ.15 ஆயிரத்தை வாங்கினார்கள் ஆனால் வழக்கு சொத்தை ரூ.5 லட்சம் கொடுத்து கிரயம் வாங்கியதாக பொய்யாக ஆவணத்தை ஏற்படுத்தி கிரயம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல. ரூ.15 ஆயிரம் கடனை வட்டியுடன் திருப்பி என்னிடம் செலுத்தும்போது நான் மறுகிரயம் எழுதி தருவதாக வாதியிடம் உறுதி அளித்தேனா என்றால் இல்லை. அவ்வாறு நான் ஏதும் சொல்லவில்லை. 06.06.2016 தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய ஆவண எண் 1339/2016 வாசாஆ2ல் சின்னபொன்னு அவருடைய கணவர் பெயர் அர்ஜீணனன் என்று ஆவணத்தில் உள்ளது அதனால் மேற்படி அர்ஜீணன் என்பவர் எனக்கு தெரியும் என்றால் அர்ஜீணன் மனைவி என்று சொல்வார்கள் ஆனால் அர்ஜீணனனை நான் நேரில் பார்த்ததில்லை. மேற்படி வாசாஆ2 கிரய பத்திரத்தை எழுதிய ஆவண எழுத்தர் மேற்படி ஆவணங்களில் உள்ள சங்கதிகளை நான் சொல்லித்தான் எழுதினாரா என்றால் சின்னபொன்னு சொன்னார் நானும் அங்கு உடனிருந்தேன்.

மேற்படி வழக்கு சொத்தினுடைய மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 33 செண்ட் ஆகும். அதன்சர்வே எண் என்னவென்றால் 8/1 ஆகும். மேற்படி சர்வே எண் 8/1ல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 34 செண்ட் ஆகும் அதில் நான் 33 செண்ட் கிரயம் பெற்றேன். மேறப்படி தாவா சொத்திற்கு தெற்கிலும் கிழக்கிலும் பிச்சைகாரச்சியம்மாள் உடைய விவசாய நிலமும் , மேற்கில் ராஜப்பன் விவசாய நிலமும், வடக்கில் அர்ஜீணனின் விவசாய நிலமும் இடமும் உள்ளது. மேற்படி தாவா சொத்தை சின்னபொன்னு யாரிடம் இருந்து முதலில் கிரயம் பெற்றார் என்றால் ராஜப்பன் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்றார். வாதி அந்த சொத்தை எந்த ஆண்டு கிரயம் பெற்றார் என்றால் தெரியாது. நான் 2016ல் கிரயம் எழுதி வாங்கும்போது அசல் மூல பத்திரத்தை கேட்டேனா என்றால் கேட்டேன் அப்போது அது தொலைந்து போய் விட்டது என்று சொன்னார்கள்.

என்னிடம் காண்பிக்கப்டும் வாசஆ1 ஆவணமானது வாதி கடந்த 10.08.1998 தேதியன்று கிரயம் பெற்ற கிரய ஆவண எண் 796/1998 அசல் பத்திரம் என்றால் சரிதான். அந்த பத்திரம் நான் கடந்த 2016ம் ஆண்டு கிரயம் பெறும்போது அசல் தொலைந்து போய் விட்டதாக நான் கிரயம் பெறும்போது என்னிடம் தெரிவித்தார்கள் என்றால் சரிதான். பொதுவாக கிரயம் பெறும்போது கிரயம் கொடுக்கும் நபரிடம் இருந்து மூல ஆவணங்களை கிரயம் பெறும்நபர் கேட்டு பெற வேண்டும் என்றால் சரிதான். ஆனால் நான் மூல ஆவணங்களை கேட்டேன் தொலைந்து விட்டது என்று சொன்னார்கள். நான் உண்மையிலேயே ரூ.5 லட்சத்திற்கு கிரயப் பெற்று வாங்கியிருந்தால் நான் மூல பத்திரத்தை கேட்டு

வாங்கியிருப்பேன் என்றாலும் பொறுப்புக்காக ஏற்பட்ட ஆவணம் என்பதால் தான் நான் அதனை வலியுறுத்தி கேட்டு வாங்கவில்லை என்றால் சரியல்ல. சட்டப்படி கிரயப் பத்திரம் தொலைந்து போனால் தினசரி நாளிதழில் பத்திரம் தொலைந்து போய்விட்டது என்று விளம்பரம் செய்து அந்த விளம்பர பிரதியினை பத்திரபதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்து அதன் பின்னர் தான் கிரயபத்திரம் பதிவு செய்ய வேண்டும் என்று நடைமுறையில் உள்ளது என்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

நான் வாங்கிய 2016ம் தேதியிட்ட கிரய ஆவணத்திலும் வாசாஆ1 மூல ஆவணம் தொலைந்து போனதிற்கு எந்த விபரமும் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

04.02.2019 தேதியிட்ட வாசாஆ3 ஆன ஆனானந்தல் கிராம கூட்டு பட்டா எண் 366ல் சிவக்குமார், துளசி மணி, சின்னபொன்னு ஆகியோர் பெயர் கூட்டு பட்டாவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசாஆ3 ஆவண கூட்டு பட்டாவில் என்னுயை பெயர் இல்லை என்றால் சரியல்ல மேற்படி வருவாய் ஆவணங்களில் அவருடைய பெயரை நீக்கம் செய்யாமல் இருந்து வருகிறது. எனது பெயர் உள்ள பட்டாவை நான் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன்.

அடங்கல் பதிவேடு பற்றி தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வாசாஆ4 அடங்கல் பதிவேடு 04.02.2019 தேதியிட்ட அடங்கல் பதிவேடு வாதியின் சின்னபொன்னு பெயரில் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தான் பயிர் வைத்து வருகிறேன். வாசாஆ5 ஆன 07.02.2019 வரி ரசீதில் வாதியின் பெயர் சின்னபொன்னு க/பெ அர்ஜீணன் என்று உள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்தை தற்போது நான்தான் பயிர் வைத்துள்ளேன் என்றால் சரிதான். மாட்டு தீவணம் பயிறிட்டு அறுவடை செய்துள்ளேன். நான் தான் தற்போது வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறேன் என்று சுவாதீனத்தில் இருந்து வருகிறேன் என்பதற்கு ஆதாரமாக வருவாய் துறை ரசீது தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது வக்கீலிடம் கொடுத்துள்ளேன். 2019ம் வருடம் ஜனவரி மாதம் சின்னபொன்னு என்னிடம் பெற்ற ரூ.15 ஆயிரம் கடனை கொடுத்துவிட்டு மறு கிரயம் எழுதி கொடுக்க சொன்னபோது நான் வாதியை அடித்து திருப்பி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் சொத்தை மறு கிரயம் கொடுக்காதது சம்மந்தமாக என்மீது கடந்த 22.01.2019 தேதியன்று திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு, 22.01.2019 தேதியன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பிய புகார் மனு மற்றும் அவற்றின் அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் வாசாஆ10 முதல் வாசாஆ13 என்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து விசாரணை செய்து வாதியை தான் திட்டி அனுப்பிவிட்டார்கள். அது போல் வாதியை திட்டி அனுப்பவில்லை என்றும் நான் வழக்கிற்காக அவ்வாறு சொல்கிறேன் என்றும் என்னுடைய ஆள் பலத்தை பயன்படுத்தி அந்த மனுக்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக்கொண்டேன் என்றாலும் சரியல்ல.

வாதி சின்னபொன்னு எனக்கு ஒரு வாசாஆ9 ஆன வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். என் பெயரை வருவாய் துறை ஆவணங்களில் கூட்டாக சேர்க்க கூடாது என 2முதல் 4 பிரதிவாதிகளான

வருவாய் துறை அதிகாரிகளுக்கு வாதி வாசாஆ15 ஆன வழக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

கடந்த 24.03.2019ம் தேதியன்று வாதி தாவா சொத்தில் உளுந்து பயிரிட்டு இருந்ததததை நான் பொய் புகார் கொடுத்து நான் ஜேசிபி வாகனத்தை பயன்படுத்தி அனுப்பிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் பயிர் வைத்த பயிரை நானே எப்படி அழிப்பேன் நான் தான் பயிர் வைத்திருந்தேன். மேற்படி பயிரை அழித்தது சம்மந்தமாக வாதி என் மீது வெறையூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல.

வாதி என்னிடம் பெற்ற ரூ.15 ஆயிரம் கடனுக்கு ஈடாக எழுதிப்பெற்றிருந்த தாவா சொத்தை நான் மறு கிரயம் எழுதி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு அதனை எழுதி கொடுக்காமல் காலதாமதம் செய்ததால் வாதி இந்த அசல் வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மதிப்பு பல லட்சம் மதிப்பு கூடிவிட்டதால் நான் தற்போது அந்த சொத்தை திரும்ப எழுதிக்கொடுக்காமல் பேராசையோடு வாதி அலைக்கழித்து வருகிறேன் என்றால் சரியல்ல. வாதி என்னிடம் வாங்கிய கடன் ரூ.15 ஆயிரத்திற்கு வட்டி கொடுத்துவிட்டார் என்றாலும் கடந்த 2019ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை சேரும் வட்டி கொடுக்க தயாராக உள்ளார் என்றும் அதனால் அதனை பெற்றுக்கொண்டு வாதியின் பெயருக்கு நான் தாவா சொத்தை மறுகிரயம் எழுதி கொடுக்க சட்டப்படியும தார்மீக அடிப்படையிலும் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

நான் திருவண்ணாமலை நீதிமன்றத்திற்கு சாட்சி சொல்வதற்காக வந்துள்ளேனா என்றால் வேலை இருந்தால் வருவேன் யாரும் என்னை

சாட்சி சொல்ல அழைத்ததில்லை. எனக்கு முழு நேர தொழிலே வட்டி விடும் தொழில் தான் என்றாலும் வட்டி கொடுக்காமல் இருப்பவர்கள் மீது வழக்கு தொடுத்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வாதி கேட்டுக்கும் பரிகாரம் படி தீர்ப்பாக வேண்டும் என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை சாட்சி சொல்ல நீதிபதி ஆகிய என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அதனை சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு அதை சாட்சி சரி என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Sd/- (M.C.Arun)
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கீழ்பென்னாத்தூர்